Registered as Newspaper

# சுடர் ஒளி

THE SUDAR OLI

සුඩර් ඔළි

13.01.2021 புதன்கிழமை

# பரராஜசிங்கம் படுகொலை பிள்ளையானுக்கு விடுதலை



யாழ்ப்பாணம், ஜன.13

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தின் படுகொலை தொடர்பிலான வழக்கில் இருந்து நாடாளுமன்ற உறுப்பினர் சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) உட்பட ஐந்து பேரும் விடுவிக்கப்பட்டனர். வழக்கும் தள்ளுபடி செய்யப் பட்டுள்ளது. 2

## வவுனியாவில் 16 பேருக்கு தொற்று இன்று உறுதி

வவுனியா, ஜன.13

வவுனியாவில் இன்று மேலும் 16 தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். அதையடுத்து வவுனியா நகரக் கொத்தணியால் பாதிக்கப் 2

## மீண்டும் வருகின்றனர் சிரேஷ்ட அமைச்சர்கள்

கொழும்பு, ஜன.13

சிரேஷ்ட அமைச்சர்கள் என்ற வகைப்படுத்தலில் சிலரை நியமிப்பது தொடர்பாக அரசு கவனம் செலுத்தியுள்ளது என்று தகவல் வெளியாகியுள்ளது.

வய தில் முதிர்ந்த சில அமைச்சர்களைச் 2



## ரஞ்சனுக்கு பதில் அஜித்

கொழும்பு, ஜன.13

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு பதிலாக அஜித் மானப் பெரும நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்படவுள்ளார். நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் கம்பஹா மாவட்ட நாடாளு 2

## யாழ். மாநாகர எல்லைக்குள் புதிதாக நினைவேந்தல் தூபி

### மாநகர சபையில் தீர்மானம்

யாழ்ப்பாணம், ஜன.13

யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைக்குள் புதிதாக முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி அமைப்பது உட்பட மூன்று தீர்மானங்கள் யாழ்ப்பாணம் மாநகர சபையில் நிறைவேற்றப்பட்டுள்ளன. யாழ்ப்பாணம் மாநகர சபையின் 2021ஆம் ஆண்டுக்கான முதலாவது அமர்வு இன்று யாழ்ப்பா 2

## ஐ.தே.கட்சிக்குள் அதிரடி மாற்றம்

கொழும்பு, ஜன.13

ஐக்கிய தேசியக் கட்சியின் புதிய பொதுச் செயலாளராக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாலித ரங்கே பண்டார நியமிக்கப்பட்டுள்ளார்.

ஐக்கிய தேசியக்கட்சியின் மத்தியசெயற்குழுக் கூட்டம் இன்று முற்பகல் கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் சிறிகொத்தவில் நடைபெற்றது. அதில் கட்சியின் நிர்வாகப் பதவிகளுக்கு புதியவர்களை நியமிப்பதற்கு கட்சியின் மத்திய செயற்குழு அனுமதி 2



அரசியல் கைதிகளின் வாழ்வியலைச் சித்தரிக்கும் கண்காட்சி ஒன்று இன்று யாழ்ப்பாணம் பேருந்து நிலையம் முன்பாக நடைபெற்றது. குரலற்றவர்களின் குரல் அமைப்பு இதை ஏற்பாடு செய்திருந்தது. (எ-7)

## டெங்குக் களத்தடுப்பு உத்தியோகத்தர் கவனவீர்ப்பு

வடக்கு மாகாண டெங்குக் களத்தடுப்பு உத்தியோகத்தர்கள் இன்று வடக்கு மாகாண ஆளுநர் செயல 2



## அரசியல் கைதிகளுக்காக குரல் கொடுத்த சிங்களவர்

யாழ்ப்பாணம், ஜன.13

தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்க வேண்டும் என்று தெரிவித்து யாழ்ப்பாணம் பேருந்து நிலையத்தில் நடைபெற்ற கவனவீர்ப்பில் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த ஒருவரும் கலந்து கொண்டார். வெலிஓயாவில் இருந்து வந்திருந்த இவர், நீண்டகாலமாகச் சிறையில் வாடும் அரசியல் கைதிகளை விடுவிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார். (எ-இ)

## செல்வா திரையரங்குக்கு சுகாதாரப் பிரிவினர் சீல்

யாழ்ப்பாணம், ஜன.13

யாழ்ப்பாணத்தில் உள்ள செல்வா திரையரங்கு தனிமைப்படுத்தல் விதிகளுக்கு அமைய இன்றிலிருந்து 14 நாள்களுக்கு முடக்கப்பட்டுள்ளது. எனினும் சுகாதார நடைமுறைகளைப் பேணி திரைப்படக் காட்சிகளைக் காண்பிக்க மாலை சுகாதார பிரிவினரால் அனுமதி 2



# பரராஜசிங்கம் ....

இந்த வழக்கு மட்டக்களப்பு மேல் நீதிமன்ற விசேட நீதிபதி டி.சூசைதாசன் முன்னிலையில் இன்று (புதன்கிழமை) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே வழக்குத் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் 2005ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 25ஆம் திகதி மட்டக்களப்பு புனித மரியாள் தேவாலயத்தில் படுகொலை செய்யப்பட்டார்.
இந்தச் சம்பவம் தொடர்பாக தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் தலைவர் சிவநேசதுரை சந்திரகாந்தன் உட்பட ஐந்து பேர் சந்தேகத்தின் அடிப்படையில் 2015ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டு தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.
2015ஆம் ஆண்டு தாங்கள் கைதுசெய்யப்பட்டு குற்ற ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்ட முதலாம் 02ஆம் எதிரிகளின் வாக்குமூலமானது சுயேச்சையாக வழங்கப்படவில்லை, தூண்டுதல் அல்லது அச்சுறுத்தல் காரணமாக அந்த வாக்குமூலத்தை வழங்கியிருந்தார்கள், பயங்கரவாத தடுப்புப் பிரிவினரால் நேரடியாக நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டிருந்தது என்று தெரிவித்து மேன்முறையீட்டு நீதிமன்றில் மீளாய்வுக்கு விண்ணப்பிக்கப்பட்டிருந்தது.
இந்த ஒப்புதல் வாக்குமூலத்தை மேன்முறையீட்டு நீதிமன்றம் நிராகரித்தன் அடிப்படையில் 24ஆம் திகதி மட்டக்களப்பு மேல்நீதிமன்றத்தில் சட்டமா அதிபரின் ஒப்புதலின் பேரில் பிணை வழங்கப்பட்டிருந்தது.
கடந்த திங்கட்கிழமை சட்டமா அதிபர் திணைக்களம் இந்த வழக்கைத் தொடர்ந்து நடத்தமுடியாது என மட்டக்களப்பு மேல் நீதிமன்றுக்கு அறிவித்திருந்த நிலையில், வழக்கின் குற்றச்சாட்டுகளில் இருந்து அவர்களை விடுவித்து வழக்குத் தள்ளுபடி செய்யப்பட்டது. (எ-இ)

## யாழ். மாநகர எல்லைக்குள்...

ணம் மாநகர முதல்வர் சட்டத்தரணி வி.மணிவண்ணன் தலைமையில் தற்போது நடைபெற்று வருகின்றது. அதிலேயே தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.
இன்று நடைபெற்ற அமர்வில் யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தில் அமைந்திருந்த முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி கடந்த 8ஆம் திகதி இடித்து அழிக்கப்பட்டமையைக் கண்டித்துத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதுடன், சபை அமர்வு ஐந்து நிமிடங்கள் ஒத்தி வைக்கப்பட்டது. பல்கலைக் கழக வளாகத்தில் இராணுவம் மற்றும் பொலிஸார் உள்நுழைந்தமையைக் கண்டித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டதுடன், மாநகர சபை எல்லைக்குள் புதிதாக முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபியை அமைத்தல் போன்ற தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. (எ-இ)

## ஐ.தே.கட்சிக்குள்...

வழங்கியது. ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளராக வஜிர அபேவர்தனவும், உப தலைவராக அகில விராஜ் காரியவசமும், பொதுச்செயலாளராக பாலித ரங்கே பண்டாரவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.
சாகல ரத்னாயக்க, அனோமா கமகே உட்பட மேலும் சிலருக்கு உப தலைவர் பதவி வழங்கப்பட்டுள்ளது. பிரதித் தலைவர் பதவியில் நீடிப்பதற்கு ருவான் விஜேவர்தனவுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.
அதேவேளை, ஐக்கிய தேசியக்கட்சிக்கு கிடைக்கப்பெற்ற தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை யாருக்கு வழங்குவது என்பது தொடர்பில் முடிவு எடுக்கப்படவில்லை. ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றம் செல்ல வேண்டும் என்பதே பெரும்பாலானவர்களின் கோரிக்கை என்று கட்சியின் புதிய தவிசாளர் தெரிவித்தார். (எ-44)

## வவுனியாவில்...

பட்டவர்களின் எண்ணிக்கை 146 ஆக உயர்ந்துள்ளது.
வவுனியா, பட்டாணிச்சூரில் கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டதையடுத்து, வவுனியா வியாபார நிலையங்களில் பணியாற்றுபவர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.
அவற்றில் ஒரு தொகுதி முடிவுகள் இன்று காலை வெளியான நிலையில், வவுனியா மில் வீதியில் உள்ள வர்த்தக நிலையங்களில் பணியாற்றும் 16 பேருக்கு தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.
கடந்த ஒருவாரத்தில் வவுனியா நகரப் பகுதியில் 146 தொற்றாளர்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர்.(எ110)

## ரஞ்சனுக்கு...

மன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு 4 வருட கடூழிய சிறைத் தண்டனை விதித்து நேற்று உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.
அவருக்குப் பதிலாக நாடாளுமன்ற உறுப்பினராகும் வாய்ப்பு விருப்பு வாக்கு பட்டியலில் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு அடுத்த இடத்தில் உள்ள அஜித் மானப்பெருமவுக்கு கிடைத்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
ரஞ்சன் ராமநாயக்க, நீதிமன்ற அவமதிப்பு குற்றச்சாட்டு காரணமாக சிறைத் தண்டனைப் பெற்று அவரது நாடாளுமன்ற உறுப்புரிமையை இழக்க நேரிடுவதால், அஜித் மானப்பெரும பதிலீடு செய்யப்படுவார் என ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலர் ரஞ்சித் மத்தும பண்டார கூறியுள்ளார். அஜித் மானப்பெருமவை பதிலீடு செய்ய தமது கட்சி எந்த கோரிக்கைகளையும் முன்வைக்கவில்லை எனவும், 1981 ஆம் ஆண்டின் முதலாம் இலக்க நாடாளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் பிரகாரம் தானியக்க முறையில், அது குறித்த செயற்பாடுகள் இடம்பெறும் எனவும் ரஞ்சித் மத்தும பண்டார கூறினார்.
2020 ஒகஸ்ட் பொதுத் தேர்தலின் போது கம்பஹா மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் போட்டியிட்ட அஜித் மான்னப்பெரும 47 ஆயிரத்து 212 வாக்குகளைப் பெற்றுள்ளார்.
ஐக்கிய மக்கள் சக்தியின் பட்டியலில் அவரே அடுத்த இடத்தில் உள்ள நிலையில், தெரிவு செய்யப்பட்ட ஒரு வேட்பாளர் பதவியை இழக்கும் போது தேர்தல்கள் ஆணைக்குழு அடுத்த சில நாட்களில் பட்டியலில் அடுத்த இடத்தில் இருப்பவரை பெயரிட்டு வர்த்தமானி வெளியிடுவது வழமையாகும்.(எ-இ)

## மீண்டும்.....

சிரேஷ்ட அமைச்சர்கள் என்ற வகைப்படுத்தலில், 2015ஆம் ஆண்டுக்கு முன்னர் அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச நியமித்திருந்தார்.
தற்போதைய அரசிலும் அவ்வாறு சிலரை நியமிப்பது தொடர்பாக அரச உயர்பீடம் கலந்துரையாடியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. இந்த சிரேஸ்ட அமைச்சர்கள் என்ற பட்டியலில் தற்போதைய அமைச்சர்களான காமினி லொக்குகே, வாசுதேவ நாணயக்கார ஆகியோர் சேர்க்கப்படலாம் என்று கூறப்படுகின்றது.(எஇ)



முல்லைத்தீவு, நீராவியடிப் பிள்ளையார் ஆலயத்தில் வருடந்தோறும் இடம்பெறும் தைத்திருநாளை முன்னிட்டு மரபு வழி விசேட பொங்கல் வழிபாடுகள் இன்று நடைபெற்றன.(எ246)



## செல்வா...

வழங்கப்பட்டுள்ளது.
திரைப்படம் பார்ப்பதற்கு வெளி மாவட்டங்களில் இருந்தும், தனிமைப்படுத்தப்பட்ட பகுதியில் இருந்தும் பார்வையாளர்கள் வந்திருந்தனர் என்றும், திரையரங்கில் சுகாதார நடைமுறைகள் பின்பற்றப்படவில்லை என்பதாலும் திரையரங்கு மூடப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-7)

## டெங்குக்...

கத்துக்கு முன்பாகக் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். காலை 9 மணி முதல் 10 மணிவரை இந்தப் போராட்டம் நடைபெற்றது.
வடக்கு மாகாணத்தில் தற்போது 85க்கும் மேற்பட்டவர்கள் களத்தடுப்பு உத்தியோகத்தர்களாகப் பணியாற்றுகின்றனர்.
ஆனால் அவர்களுக்கு இன்னமும் நிரந்தர நியமனம் வழங்கப்படவில்லை. தங்களுக்கு நிரந்தர நியமனம் வழங்க வேண்டும் என்று கோரியே கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டுள்ளது. தங்களது கோரிக்கை அடங்கிய கடிதத்தை ஆளுநரின் செயலரிடம் அவர்கள் கையளித்தனர்.(எ25,20)

# இந்திய மீனவர்கள் 26 பேருக்கு விடுதலை

யாழ்ப்பாணம், ஜன.13
இந்திய மீனவர்கள் 26 பேர் கடுமையான நிபந்தனைகளுடன் ஊர்காவற்றுறை நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டுள்ளனர்.
இனிவரும் காலத்தில் இதே குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டால் இரு ஆண்டு கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்படும் என்றும் நீதவான் எச்சரித்தார்.
இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடித்த குற்றச்சாட்டில் இந்திய மீனவர் கைது செய்யப்பட்டனர். அவர்களின் இழுவைப் படகு, வலைகளும் பறிமுதல் செய்யப்பட்டன.
விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த இவர்கள், இன்று ஊர்காவற்றுறை நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். அவர்களைக் கடும் எச்சரிக்கையுடன் நீதவான் ஜூட்சன் விடுவித்தார்.
மீனவர்களின் படகு உட்பட வலைகள் தொலைபேசிகள் எக்கோ இயந்திரம் உட்பட அனைத்துபொருட்களும் அரசுடமையாக்கப்பட்டன.
கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் காரைநகர் கடற்படைத் தளத்தில் தனிமைப்படுத்தப்பட்டு இரண்டு தடவைகள் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு அவர்களுக்கு தொற்று இல்லை என்று உறுதிப்படுத்தப்பட்ட பின்னரேயே நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். (எ-26)

# சுகாதார விதிமீறல் மேலும் பலர் கைது

முகக்கவசம் அணியாமை மற்றும் சமூக இடைவெளியைப் பின்பற்றத் தவறியமை ஆகிய குற்றச்சாட்டுக்களில் கடந்த 24 மணி நேரத்தில் மேலும் 24 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த ஒக்ரோபர் 30 ஆம் திகதியிலிருந்து இதுவரை சுகாதார விதிகளை கடைப்பிடிக்கத் தவறிய குற்றச்சாட்டில் இதுவரை 2 ஆயிரத்து 462 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதி பொலிஸ் மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்துள்ளார். (ச-இ)



தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் வருடாந்த பட்டமளிப்பு விழா, பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது. இதன் போது, பிரதமர் மஹிந்த ராஜபக்சவால், 50 பட்டதாரிகளுக்கு பட்டமளிக்கப்பட்டது. (க)

# போதை மாத்திரைகளுடன் ஒருவர் கைது

கொழும்பு, ஜன.13

20 லட்சம் ரூபா பெறுமதியான ஐஸ் போதை மாத்திரைகளுடன் ஒருவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

அத்துருகிரிய போதிராஜ மாவத்தையைச் சேர்ந்த ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் ஐஸ் போதைப்பொருள் களை விற்பனை செய்யும் பிரபல வர்த்தகர் ஒருவரின் உதவியாளர் என பொலிஸாரால் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

# மக்களை அச்சமூட்டும் நிலையில் நாட்டின் அரசியல் தலைவர்கள்!!

## அரசை சாடுகிறார் கலையரசன் எம்.பி.

அம்பாறை, ஜன.13

யுத்தத்தின் பின் மக்களை அரவணைக்கும் எண்ணம் இல்லை என்பது ஜனாதிபதியின் பேச்சில் தெரிகின்றது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் தவராஜா கலையரசன் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டத்தின் ஆலையடி வேம்பு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களை சந்தித்து உலர் உணவுப் பொருள்களை வழங்கி வைத்த பின்னர் ஊடகங்களுக்கு மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மேலும் குறிப்பிடுகையில்,

நாட்டில் இருக்கும் அரசியல் தலைவர்கள் மக்களை அச்சமூட்டும் வகையில் அரசியல் செய்து வருகின்றனர்.

குறிப்பாக மக்கள் பாதுகாப்பு அமைச்சரின் மோசமான இனவாத அடிப்படை வார்த்தைகளை பேசுவது மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்துகிறது. தொடர்ச்சியாக தமிழ் மக்களை அடக்கி ஆள வேண்டும் என்ற வகையில் அவர்களது செயற்பாடுகள் இருக்கின்றன. நாங்கள் இந்த நாட்டில் தொடராக ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்பதையே விரும்புகின்றோம்.

அவர்களது பேச்சில் சிறுபான்மை சமூகம் வாழ முடியாது என்றதொரு நிலையாக இருக்கின்றது. குறிப்பாக கிழக்கில் அதிகரித்துள்ளது.

நாட்டின் ஜனாதிபதி யுத்தத்தை உதாரணம் காட்டி மிக மோசமாக பேசியிருக்கின்றார்.

யுத்தம் முடிவடைந்த பின்னர் ஏனைய மக்களையும் அரவணைத்து நாட்டின் பிரஜை என்ற அடிப்படையில் செயற்பட வேண்டும். இது நாட்டை ஆளுகின்ற தலைவர்களது தலையாய கடமையாகும். மாறாக எம்மை மாற்றுப் பார்வைகொண்டு பார்க்கும் நிலை மாற வேண்டும். என்றார். (ந)

# இலங்கையரை தாயகம் அழைக்க நடவடிக்கை

கொழும்பு, ஜன.13

கொரோனாத் தொற்று காரணமாக வெளிநாடுகளில் சிக்கியுள்ள இலங்கையர்களை இன்று முதல் நாட்டுக்கு அழைத்து வருவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளுக்கு உட்படும் 300 பேர் நாளாந்தம் நாட்டுக்கு அழைத்து வரப்படுவர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (ச-இ)

# கொவிட்-9 தொற்றால் மேலும் 4 பேர் மரணம்

கொழும்பு, ஜன. 13

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் மேலும் 4 பேர் உயிரிழந்துள்ளனர் என அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்தது. கொழும்பு13 பிரதேசத்தைச் சேர்ந்த 82 வயதுடைய பெண்ணொருவரும், ஹங்வெல்ல பிரதேசத்தைச் சேர்ந்த 47 வயதுடைய ஆணொருவரும், மாத்தளை பிரதேசத்தைச் சேர்ந்த 84 வயதுடைய பெண்ணொருவரும் வெல்லம்பிட்டி பிரதேசத்தைச் சேர்ந்த 65 வயதுடைய ஆணொருவரும் குறித்த வைரஸ் தொற்றால் உயிரிழந்தனர். இதன்படி இலங்கையில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 244 ஆக அதிகரித்துள்ளது. (ரி5)

# திருநெல்வேலியில் களை கட்டிய பொங்கல் வியாபாரம்

யாழ்ப்பாணம், ஜன.13

யாழ்ப்பாணம் திருநெல்வேலி சந்தையை அண்டிய பகுதிகளில் தைப்பொங்கல் பண்டிகைக்கான வியாபாரங்கள் இன்று காலை களைகட்டின .

கொரோனா நிலைமைகளை கருத்தில் கொண்டு வடக்கில் சந்தைகள் மூடப்பட்டுள்ள நிலையிலும் திருநெல்வேலி சந்தையை அண்டிய பகுதிகளில் பொங்கல் வியாபாரம் களை கட்டியுள்ளது. மண் பானை 350 ரூபாவிலிருந்தும், இஞ்சி, மஞ்சள் இலை 20 ரூபாவிலிருந்தும், கரும்பு 100 ரூபாவிலிருந்தும் விற்பனை செய்யப்பட்டன.

பொலிஸார் மற்றும் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் கண்காணிப்பு கடமையில் ஈடுபட்டுள்ளனர். (ச-7)



# சட்டவிரோத பணத்துடன் இருவர் கைது

கொழும்பு, ஜன.13

கிராண்ட்பாஸ் பகுதியில் சட்டவிரோதமாக ஒரு தொகை பணத்தை வைத்திருந்த குற்றச்சாட்டில் இருவரை குற்றப்புலனாய்வு திணைக்கள அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

இவர்களிடமிருந்து 12 மில்லியன் ரூபா பணம் கைப்பற்றப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ச-இ)

# வாக்காளர் பெயர்ப்பட்டியலில் உங்கள் பெயரை உறுதிப்படுத்துக

கொழும்பு, ஜன.13

வாக்காளர் பெயர்ப்பட்டியலில் உங்கள் பெயர் இல்லாவிட்டால் எதிர்வரும் 19 ஆம் திகதிக்கு முன்னர் 0112860034 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு அறிவிக்குமாறு ஆணைக்குழு கோரியுள்ளது. 2020 ஆம் ஆண்டு வாக்காளர் பெயர்ப்பட்டியலில் உங்கள் பெயர் இடம்பெற்றுள்ளதா? என்பதை தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் www.election.gov.lk என்ற உத்தியோகபூர்வ இணையத்தளம் ஊடாக சரிபார்த்துக்கொள்ளுமாறும் அல்லது அந்தந்த கிராம அலுவலரிடமும் இதனை அறிந்துகொள்ள முடியும் எனவும் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (ச-இ)

# மறைத்து வைக்கப்பட்ட நிலையில் ஹெரோய்ன் மீட்பு

கொழும்பு, ஜன.13

கொஸ்கொட வனப்பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் 20 கிலோகிராம் ஹெரோய்ன் கைப்பற்றப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது. பொலிஸ் விசேட அதிரடி படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போதே இந்த போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ச-இ)

# சு.கவின் தலைவராக மைத்திரி பதவி வகிப்பது சட்டவிரோதம்

## சந்திரிகா குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன.13

ஜனாதிபதியின் தீர்மானம் அரசமைப்புக்கு விரோதமானது என்று உச்சநீதிமன்றம் அறிவித்தும், ஜனாதிபதியின் ஆசனத்தில் அமர்ந்த முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, தொடர்ந்தும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராக பதவிவகிப்பது சட்டவிரோதமானது என்று அந்தக் கட்சியின் போஷகரான சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.



இது தொடர்பில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரான முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு அவர் காட்டமான கடிதமொன்றை அனுப்பிவைத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் தான் தொடர்ந்தும் சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்தான், கட்சியின் மத்திய செயற்குழு அங்கத்தவர்தான் என்பதை அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ப)

# கிளி. இந்துவில் வரவேற்பு நிகழ்வு

கிளிநொச்சி, ஜன.13

கிளிநொச்சி இந்துக் கல்லூரியில் புதிதாக கடமையைப் பொறுப்பேற்ற அதிபர் திரு மதி இ.மீனலோஜினி மற்றும் பிரதி அதிபர் ம.உமாசங்கர் ஆகியோரை வரவேற்கும் நிகழ்வு நேற்று செவ்வாய்க்கிழமை முற்பகல் பொன்சபாபதி மண்டபத்தில் பிரதி அதிபர் மு.பிறேம்குமார் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் முன்னாள் அதிபர் கி.விக்னராஜா, பிரதி அதிபர், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்துகொண்டனர். பாடசாலையின் முன்னாள் அதிபர் மற்றும் புதிதாக கடமையைப் பொறுப்பேற்ற அதிபர், பிரதி அதிபர் ஆகியோர் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டனர். (ந-159)

# தைப்பொங்கலை முன்னிட்டு ஆலயங்களுக்கு நிதி உதவி

கொழும்பு, ஜன.13

பின்தங்கிய மாவட்டங்களிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட 100 இந்து ஆலயங்களுக்கு தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு 10 ஆயிரம் ரூபா மதிப்பிலான காசோலைகள் வழங்கும் நிகழ்வு நேற்றையதினம் அலரி மாளிகையில் இடம்பெற்றது.

புத்தசாசன சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் என்ற வகையில் பிரதமர் மஹிந்த ராஜபக்சவின் எண்ணக்கருவுக்கு அமைய இந்த காசோலைகள் பகிர்ந்தளிக்கப்பட்டன. காசோலை வழங்கும் நடவடிக்கை மாவட்ட ரீதியில் முன்னெடுக்கப்படும். (ந-இ)



# தண்ணீர் வாளியில் மூழ்கி 2 வயது சிறுமி உயிரிழப்பு

புதுக்குடியிருப்பு, ஜன.13

இரண்டு வயதுடைய சிறுமி ஒருவர் வீட்டில் நீர் நிரப்பி வைக்கப்பட்ட வாளியில் விழுந்து உயிரிழந்துள்ளார்.

குறித்த சம்பவம் புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட மல்லிகைத்தீவு கிராம அலுவலர் பிரிவில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மதியம் இடம்பெற்றுள்ளது. சம்பவத்தில் உதயதர்சன் தர்வினா என்ற சிறுமியே உயிரிழந்துள்ளார்.

குறித்த சிறுமி அயலில் இருந்த தாயாரின் சகோதரி வீட்டுக்கு விளையாடச் செல்வது வழமையாக இருந்துள்ளது. அவ்வாறு கடந்த ஞாயிறு அன்றும் விளையாடச் சென்றபோதே அங்கு நீர் நிரப்பி வைக்கப்பட்டிருந்த வாளியில் விழுந்து யாரும் அவதானிக்காத நிலையில் இறந்துள்ளார். இக் குழந்தை பெற்றோருக்கு ஒரே ஒரு பிள்ளை என்பது குறிப்பிடத்தக்கது. (ந-115)

# சீரமைக்கப்பட்ட கட்டடம் பிரதமரால் திறப்பு

கொழும்பு ஜன.13

கொழும்பு தேர்ஸ்டன் கல்லூரியின் 71ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு, சீரமைக்கப்பட்ட கல்லூரியின் பழைமையான கட்டடம் பிரதமர் மஹிந்த ராஜபக்சவின் தலைமையில் திறந்துவைக்கப்பட்டது.

பாதுகாப்பற்ற நிலையில் பழுதடைந்திருந்திருந்த கட்டடம் பாதுகாப்பு அமைச்சின் தலையீட்டுடன் இலங்கை கடற்படையினரால் சீரமைக்கப்பட்டது. அதற்கான உபகரணங்கள் மற்றும் பொருள்கள் கொள்வனவுக்காக மாத்திரம் தேர்ஸ்டன் கல்லூரியின் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் 13 மில்லியன் ரூபாவைச் செலவிட்டுள்ளது. (ப)

# 25 குடும்பங்களுக்கு நுளம்பு வலைகள்

யாழ்ப்பாணம், ஜன.13

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் கொழும்புக் கிளையின் துணைத் தலைவர் திருமதி. மிதிலா சிறீபத்மநாதனின் நிதியுதவியில் கந்தர்மடம் அரசடிப் பகுதியில் வசிக்கின்ற வறுமைக்குட்பட்ட 25 குடும்பங்களுக்கு நுளம்பு வலைகள் வழங்கிவைக்கப்பட்டன .

அரசடி பகுதியைச் சேர்ந்த திரு . கனகன் ஜீவதாஸின் வேண்டுகோளுக்கிணங்க வேலணைப் பிரதேச சபை உறுப்பினர் கருணாகரன் நாவலனின் ஏற்பாட்டில் நடைபெற்ற இச் செயற்பாட்டில் வட மாகாணசபையின் முன்னாள் உறுப்பினர் விந்தன் கனகரத்தினம் , தமிழ் அரசுக் கட்சி உறுப்பினர்களான கருணாகரன் குணாளன், தரங்கன் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர். (ப)



# இலங்கையின் தேரர்களுக்கு மியான்மர் அரசு கௌரவம்

கொழும்பு, ஜன.13

மியான்மரின் 73ஆவது சுதந்திர தினத்தில் இலங்கையைச் சேர்ந்த நான்கு பௌத்த மதகுருமார்கள் மற்றும் ஒரு சாதாரண நபருக்கு 'அக்கமஹபன்டித' என்ற கௌரவ மத அந்தஸ்தை வழங்குவதற்கு மியான்மர் ஜனாதிபதி யுவின் மைண்ட் தீர்மானித்துள்ளார்.

தெஹிவளை ஸ்ரீ மஹா போதி மஹா விஹாரையின், மிஹிரிபென்னே சோபித்த தேரோ, களனிய ரஜமஹா விகாரை மற்றும் கித்சிரிமேவன் ரஜ மஹா விகாரையின் கலாநிதி. கொல்லுப்பிட்டியே மஹிந்த சன்ஹ ரக்கித மஹா தேரோ, ஸ்ரீ அமரபுர தர்மரக்ஷி தவம்ச மஹா நிகாயவின் திரிகுணாமலே ஆனந்த மஹாநாயக்க மஹா தேரோ, ஸ்ரீ கெலயனிவாச, அமரபுர மஹா நிகாயவின், தொடம்பஹல சந்திரசிரி மஹா நாயக்க தேரோ ஆகியோருக்கே அக்கமஹபண்டித பட்டம் வழங்கப்பட்டுள்ளது.

அக்கமஹபண்டித என்பது மியான்மார் அரசால் புகழ்பெற்ற தேரவாத பௌத்த பிக்குக்களுக்கு வழங்கப்படும் ஒரு மரியாதைக்குரிய பௌத்த பட்டமாகும். அக்கமஹ பண்டித என்பதன் பொருள் 'முதன்மையான சிறந்த மற்றும் புத்தி சாதுரியமான ஒருவர்' என்பதுடன், இது பாலிச் சொற்களிலிருந்து பெறப்பட்டுள்ளது. (ப)

# புதுக்குடியிருப்பு சந்தை மீண்டும் பழைய இடத்தில்

முல்லைத்தீவு, ஜன.13

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் பொது விளையாட்டு மைதானத்தில் தற்காலிகமாக இயங்கிய பிரதேச பொதுச் சந்தையை மீண்டும் சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றி இயங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பிரதேசத்தில் கொரோனாத் தொற்றாளர் இருவர் அடையாளம் காணப்பட்ட நிலையில், சந்தை வியாபாரிகள் 14 நாள்கள் தனிமைப்படுத்தப்பட்டு, சந்தையின் வியாபார நடவடிக்கைகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்தன. தொடர்ந்து சந்தை பிரதேச சபையின் பொது விளையாட்டு மைதானத்தில் தற்காலிகமாக இயங்கியது.

தற்போது பெய்துவரும் மழை காரணமாக விளையாட்டு மைதானத்தில் வெள்ளம் நிரம்பிக் காணப்படுவதால் சந்தையை வேறு இடத்துக்கு மாற்றம் செய்து தருமாறு வியாபாரிகள் கோரிக்கை விடுத்தனர். இது தொடர்பில் புதுக்குடியிருப்பு பிரதேச வணிகர் கழகத் தலைவர், வடக்கு மாகாண ஆளுநருடன் தொடர்பு கொண்டு, வியாபாரிகளின் நிலைமையை விளக்கினார். இதனை அடுத்து மீண்டும் சந்தை, அதே இடத்தில் நடத்த ஆளுநர் நடவடிக்கை எடுத்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-19)



# தமிழ் அரசியல்வாதிகளுக்காக எதிர்காலத்தை வீணாக்காதீர்!

### இளைஞர்களைக் கோருகிறார் கிழக்கு ஆளுநர்

திருகோணமலை, ஜன.13

இளைஞர்களின் எதிர் காலத்தை, தமிழ் அரசியல் வாதிகளின் சொந்த அரசியலுக்காக தியாகம் செய்யக் கூடாது என கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யகம்பத் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் வடக்கு கிழக்கில் மேற்கொள்ளப் பட்ட ஹர்த்தால் அனுஷ்டிப்பு தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில், தற்போதைய இளைஞர்கள் தங்களது வாழ்க்கையை வெற்றிகரமாக ஆக்கிக் கொள்ள முயற்சிக்க வேண்டியதோடு, மாகாணத்தின் அபிவிருத்தி செயற்பாடுகளுடன் ஒன்றிணைந்து பயணிக்க வேண்டும். சிறிய நினைவுச் சின்ன செயற்பாடுகளுக்காக இளைஞர்கள் தங்களின் வாழ்க்கையைப் பயன்படுத்தக்கூடாது. இவ்வாறான சிறிய விடயங்களை தமிழ் அரசியல்வாதிகள் போராட்டங்களாக மாற்றிவிடுவார்கள். இவ்விடயத்தில் அரசியல் தலைமைகள் சிந்தித்து செயற்பட வேண்டும். இந்த தமிழ் இளைஞர்களின் பங்களிப்பை நாட்டின் முன்னேற்றத்துக்காகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்றார். (ந)





## தேவிபுரம் கிராம பகுதியில் காட்டு யானைகள் தொல்லை

### நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோரிக்கை

முல்லைத்தீவு, ஜன.13

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு தேவிபுரம் பகுதியில் காட்டுயானையால் பெரும் சிரமங்களை எதிர் கொண்டு வருகின்றோம் என விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

சுமார் 30 வரையான தென்னை மரங்கள் மற்றும் 150 வரையான வாழை மரங்கள் ஆகியவை நேற்றுமுன்தினம் இரவு காட்டுயானைகளால் அழிக்கப்பட்டுள்ளன. தொடர்ச்சியாக ஏற்படும் காட்டுயானைகளின் தொல்லையால் விவசாயச் செய்கையை மேற்கொள்ள முடியாத நிலை காணப்படுகின்றது என கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

அத்துடன், விவசாயத்தையே வாழ்வாதாரமாக கொண்டு இக் கிராம மக்கள் வாழ்ந்துவரும் நிலையில், தமது கிராமத்துக்கு மின்சார இணைப்பு இல்லை எனத் தெரிவித்த மக்கள், தமது கிராமத்துக்கு மின்சார இணைப்பும் யானைவேலியும் அமைத்து தர அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளார்கள். (ந-19)

## கொழும்பு மருத்துவமனையில் 200 பி.சி.ஆர் பரிசோதனைகள்

கொழும்பு, ஜன.13

கொழும்பு தேசிய மருத்துவமனையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள பி.சி.ஆர். பரிசோதனை கூடத்தின் ஊடாக நாளொன்றுக்கு 200 பரிசோதனைகள் மேற்கொள்வதற்கான வாய்ப்பு கிடைத்துள்ளது என மருத்துவமனைப் பணிப்பாளர் மருத்துவர் குமார விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்றுத் தொடக்கம் இந்த பரிசோதனை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதுவரையில் கொழும்பு தேசிய மருத்துவமனையில் முன்னெடுக்கப்படும் பி.சி.ஆர். பரிசோதனை மாதிரிகள் மருத்துவ ஆய்வகம் அல்லது முல்லேரியா மருத்துவமனைக்கு அனுப்பப்படும். எனினும் எதிர்வரும் நாள்களில் 5 மணித்தியாலங்களுக்குள் பரிசோதனை முடிவுகளை பெற்றுக் கொள்ள முடியும். இந்தப் பரிசோதனை கூடத்தை அமைக்க 13 மில்லியன் ரூபா பெறுமதியான உபகரணங்கள் திஸ்ஸ டி சில்வா அமைப்பாலும் 50 இலட்சம் ரூபா பெறுமதியான பி.சி.ஆர். இயந்திரம் ஹேமாஸ் நிறுவனத்தாலும் வழங்கப் பட்டுள்ளது. (வ-இ)

## கோத்தா மீது அவதூறு; கைதானவர் மறியலில்

கொழும்பு, ஜன.13

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கு முகநூல் ஊடாக அவதூறான கருத்துக்களைப் பதிவிட்ட முஸ்லிம் நபர் ஒருவர் கொழும்பு - தெஹிவளையில் வைத்து நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

தெஹிவளை - பீற்றர் வீதியைச் சேர்ந்த மொஹமட் சபால் நவ்ஸாட் என்பவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு பிரதான நீதிமன்றில் அவர் முன்னிலைப்படுத்தப் பட்டபோது அவரை எதிர்வரும் 14 நாள்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. (வ-இ)



## கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு சர்வதேசத்தில் கிடைத்த அங்கீகாரம்

கொழும்பு,ஜன.13

உலகில் உள்ள விமான நிலையங்களில், கட்டுநாயக்க விமான நிலையமும் சுகாதார விதிமுறைகளைப் பேணும் விமான நிலையமாக, சர்வதேச விமான சேவை கவுன்சிலால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

உலகிலுள்ள ஆயிரத்து 200 விமான நிலையங்களில் 197 விமான நிலையங்களை, கொரோனா ஆபத்து காலப்பகுதியிலும் மிகவும் பாதுகாப்பான விமான நிலையங்களாகத் தேர்வு செய்துள்ளது சர்வதேச விமான நிலைய கவுன்சில்.

அதற்கமைவாக சர்வதேச விமான நிலைய கவுன்சில் (ஐ.ஓ.சி) கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் தரநிலைச் சான்றிதழை வெளியிட்டுள்ளது.

தூய்மை, கிருமி நீக்கம், தொலைநிலை, பணியாளர் பாதுகாப்பு மற்றும் பயணிகளின் தேவைகள் தொடர்பில் ஆய்வு செய்யப்பட்டு, சான்றிதழ் வழங்கப்பட்டது. விமான நிலையம் தொடர்பான தரநிலைச் சான்றிதழ், ஏற்றுமதி மேம்பாட்டு அமைச்சர் சானகவிடம் கையளிக்கப்பட்டது. (க-இ)

## அரசின் செயற்பாடுகளால் நிபுணர்களும் அதிருப்தியில்

### எம். பி முஜிபுர் ரஹ்மான் தெரிவிப்பு

கொழும்பு, ஜன.13

கொரோனாத் தொற்றால் உயிரிழப்பவர்களின் சடலங்கள் தொடர்பில் நிபுணர்களால் வழங்கப்பட்ட அறிக்கையை மறைத்து அரசாங்கம் தான் எடுத்த தீர்மானத்தையே செயற்படுத்திக் கொண்டிருக்கிறது. இதனால் மக்கள் மாத்திரமின்றி நாட்டிலுள்ள நிபுணர்களும் அதிருப்தியடைந்துள்ளனர் என்று நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

கொவிட் தொற்றால் உயிரிழப்பவர்களின் சடலங்களை அடக்கம் செய்வதற்கு பல தரப்பினரும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ள போதிலும் அரசாங்கம் அவற்றை புறந்தள்ளியுள்ளது. இதனால் சர்வதேச ரீதியிலும் இலங்கையிலுள்ள மக்கள் தொடர்பில் கவலைபடக் கூடிய நிலையே உள்ளது. தற்போதைய அரசாங்கம் சில வருடங்களின் பின்னர் ஆட்சியிலிருந்து சென்றாலும் சர்வதேசத்தின் மத்தியில் இலங்கை மீது நீங்காத கறையே காணப்படும். இவ்வாறான செயற்பாடுகள் ஏற்றுக் கொள்ள முடியாதவை என அவர் மேலும் தெரிவித்தார். (வ-இ)

## சன நெரிசலான இடங்களில் கொரோனா சோதனைகள்

### இராணுவத் தளபதி தெரிவிப்பு

கொழும்பு, ஜன.13

மக்கள் அதிகமாக ஒன்றுகூடும் இடங்களில் கொரோனாத் தொற்றுக்கான துரித பரிசோதனைகளை மேற்கொள்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

பல்பொருள் அங்காடிகள், மீன் சந்தைகள் உள்ளிட்ட அதிகளவானோர் செல்லக்கூடிய இடங்களில் கொரோனா பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இதேவேளை கொழும்பு மாவட்டத்திலிருந்து வெளியேறும் தரப்பினருக்காக 11 இடங்களில் கொரோனா பரிசோதனைகளை மேற்கொள்ளும் திட்டம் மீள ஆரம்பிக்கப்படவுள்ளது என இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

மேலும், நாட்டுக்கு கொண்டுவரப்படும் கொரோனா தடுப்பூசியை ஏற்றுவதற்கான நடவடிக்கைகள் இராணுவத்தினரின் தலைமையில் மேற்கொள்ளப்படவுள்ளன எனவும் இராணுவத் தளபதி தெரிவித்துள்ளார். (ந-இ)




கனேடிய அரசாங்கம் தைப்பொங்கலை முன்னிட்டு தமிழ் மொழியையும் தமிழர்களையும் பெருமைப்படுத்தும் வகையில் தமிழ்மொழியில் அஞ்சல் தலையை வெளியிட்டுள்ளது. (ச-இ)



மன்னார் தேவன்பிட்டி றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையில் கல்வி கற்கும் 155 மாணவர்களுக்கும், முல்லைத்தீவு பாலிநகர் மகா வித்தியாலயத்தில் கல்வி கற்கும் 160 மாணவர்களுக்கும் கற்றல் உபகரணங்கள் சுவிஸ் சிறிமுருகன் ஆலயத்தின் நிதி உதவியுடன் நேற்று வழங்கப்பட்டுள்ளன.



## இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும்

கொழும்பு, ஜன.13

வடக்கு, வடமத்திய, தென், கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களில் அவ்வப்போது மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகிறது என வளிமண்டலவியல் திணைக்களம் இன்று காலை வெளியிட்டுள்ள வானிலை அறிக்கையில் தெரிவித்துள்ளது.

நாட்டின் பல பிரதேசங்களிலும் இன்று பி.ப. ஒரு மணிக்குப் பின்னர் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது எனவும் சில இடங்களில் 50 மி.மீ க்கும் அதிகமான ஓரளவு பலத்த மழைவீழ்ச்சியும் எதிர்பார்க்கப்படுகின்றது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச-இ)

### சுற்றுலாவிகளுக்கான திட்டம் இல்லை

# கொரோனா ஒழிப்பிலிருந்து விலக சுகாதார பரிசோதகர் சங்கம் முடிவு

கொழும்பு, ஜன.13

சுற்றுலாப் பயணிகளுக்கான முறையான வேலைத்திட்டம் அமுல்படுத்தப்படாவிடில் கொரோனாத் தடுப்பு நடவடிக்கைகளிலிருந்து விலகுவதற்கு பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் தீர்மானித்துள்ளது. இது தொடர்பில் சங்கத்தின் தலைவர் உப்புல் ரோஹண .தெரிவித்துள்ளதாவது,

நாட்டுக்குள் வருகைதரும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள், சுகாதார ஆலோசனைகளுக்கு அமைய சுற்றுலாப் பயணங்களை மேற்கொள்வதற்கான முறையான வேலைத்திட்டம் ஒன்றை விரைவில் அமுல்படுத்த வேண்டும். இல்லையேல் நாடு தழுவிய ரீதியில் கொரோனா வைரஸ் ஒழிப்புச் செயற்பாடுகளில் இருந்து, அடுத்த இரு வாரங்கள் விலகியிருக்க, பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் தீர்மானித்துள்ளனர். சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றாமலும், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களின் கண்காணிப்பின் கீழ் இன்றியும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் தனிமைப்படுத்தல் சட்ட விதிகளை மீறியுள்ளனர்.

இதனால் தனிமைப்படுத்தல் சட்டத்தை கடைப்பிடிக்குமாறு மக்களுக்கு ஆலோசனை வழங்க முடியாதுள்ளது என்றார். (வ-இ)



## கசிப்பு வைத்திருந்தாரென ஒருவர் கைது

கொடிகாமம், ஜன.13

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட எருவன் பகுதியில் 750 மில்லி லீற்றர் கசிப்பு வைத்திருந்த குற்றச்சாட்டில் நபர் ஒருவர் கொடிகாமம் பொலிஸாரால் நேற்று செவ்வாய்க் கிழமை கைதுசெய்யப்பட்டுள் ளார்

மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலிஸார் குறித்த நபரை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன எனத் தெரிவித்தனர். (ந-159)

## நாட்டில் முதல் தடுப்பூசி சுவசெரிய பணியாளருக்கு

கொழும்பு, ஜன.13

நாட்டில் கொரோனாத் தடுப்பூசியை ஏற்றும் முதலாவது தரப்பினராக சுவசெரிய அம்புலன்ஸ் அலுவலக உத்தியோத்தர்கள் தீர்மானிக்கப்பட்டுள்ளனர்.

கொரோனாத் தொற்றை ஒழிக்கும் செயற்பாட்டில் சுவசெரிய அம்புலன்ஸ் அலுவலக உத்தியோகத்தர்கள் முன்னின்று செயற்படுகின்றனர் என ஆரம்ப சுகாதார பராமரிப்பு, தொற்றுநோய் மற்றும் கொவிட்-19 நோய் கட்டுப்பாட்டு இராஜாங்க அமைச்சர், விசேட வைத்திய நிபுணர் சுதர்ஷனி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார்.

297 அம்பியூலன்ஸ் வண்டிகளைக் கொண்ட சுவசெரிய சேவையில் ஆயிரத்து 399 ஊழியர்கள் கடமையாற்றுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## பணியிலிருந்து நீக்கினால் ரூபா.25 இலட்சம் இழப்பீடு

### அமைச்சரவை அங்கீகாரம்

கொழும்பு, ஜன.13

நியாயமற்ற ரீதியில் தொழிலாளர்கள் பணியிலிருந்து இடைநிறுத்தப்பட்டால் அவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய இழப்பீட்டுத் தொகையை 25 லட்சம் ரூபா வரையில் அதிகரிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக தொழில் உறவுகள் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

தொழிலாளர்களின் தொழில் முடிவுறுத்தல் சட்ட ஏற்பாடுகளுக்கமைய, தொழிலாளர்களின் சேவையை முடிவுறுத்தும் போது அவர்களுக்கு செலுத்த வேண்டிய நட்டஈட்டுத் தொகையை தீர்மானிப்பதற்கான சூத்திரமொன்று அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

தொழிலாளர்கள் பணிபுரிந்த காலத்தை கருத்திற்கொண்டு இந்த தொகை தீர்மானிக்கப்படவுள்ளது. தற்போது உயர்ந்தபட்ச நட்டஈட்டுத் தொகையாக 12 லட்சத்து 50 ஆயிரம் ரூபா உள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ-இ)

# தோட்டப்புற பாடசாலைகளின் மேம்பாட்டுக்கு தோட்டக்காணி

கொழும்பு, ஜன.13

தோட்டப் பாடசாலைகளை மேம்படுத்துவதற்கு கம்பனி நிர்வாகத்தின் கீழியங்கும் தோட்டக் காணிகளை ஒதுக்குவதற்கான அங்கீகாரத்தை அமைச்சரவை வழங்கியுள்ளது. 7 மாவட்டங்களில் காணப்படும் 354 தோட்டப் பாடசாலைகளை மேம்படுத்த அரசாங்கத்துக்கு சொந்தமான தோட்டங்களில் குறைந்த பயன்பாட்டைக் கொண்ட காணிகளில் 2 ஏக்கர் காணியை ஒதுக்கி வழங்க 2018 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 10 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப் பட்டது. இவற்றை விட மேலும் 491 பாடசாலைகள் அபிவிருத்தி செய்ய வேண்டிய நிலையில் காணப்படுகின்றன. இவற்றுக்க உயர்ந்த பட்சம் 2 ஏக்கர் காணி ஒதுக்கப்பட வேண்டியுள்ளது. அதற்கமைய, இப்பாடசாலைகளுக்கு தோட்டக் கம்பனிகளின் நிர்வா கத்தின் கீழுள்ள அரசாங்கத்துக்குச் சொந்தமான தோட்டங்களில் காணிகளை ஒதுக்குவதற்கு கல்வி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (வ-இ)